கோநகர் என்னும் கோனாபட்டு

ஸ்ரீ கொப்புடையநாயகி அம்மன்

பாமாலை





இயற்றியவர்

பேரா. முனைவர் அர.சிங்காரவடிவேலன்

கண்டனூர் - 630 104.

வெளியீடு

சு.முரு. நாச்சியப்ப செட்டியார்

(ஆங்காங் நாச்சியப்பன்)

திருமகன் இல்லம்

கோனாபட்டு - 622 503.

வெகுதான்ய - வைகாசி - 3 (17.05.1998)

நாச்சியப்பா டிரஸ்ட்

முதலாம் வெளியீடு
கண்ணதாசன் கவிபோல காலமெல்லாம் நிலைத்திடுக

- சிலம்பரி சிங்காரம்

இரண்டாம் வெளியீடு
கோனாபட்டு கொப்புடையம்மன் பாமாலை

- சிலம்பரி சிங்காரம்

மூன்றாம் வெளியீடு
ஸ்ரீ கொப்புடையம்மன் பாமாலை

- அரசி

நான்காம் வெளியீடு (தயாரிப்பில்)
முத்துமாரியம்மன் முத்துமாலை

- அரசி

ஐந்தாம் வெளியீடு (தயாரிப்பில்)
கோநகர் தேவி கொப்புடையவள்

- முனைவர். மு. நாச்சியப்பன்

உ
சிவமயம்

திருவருள்திரு
தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
(அருளாட்சி)

திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்
தமிழ்நாடு

☏ குன்றக்குடி - 04577 - 64257
காரைக்குடி - 04565 - 2325

நாள் 25.5.97

அன்பிற் சிறந்த நமது திரு [illegible] செட்டியார் அவர்களுக்கு, [illegible]. திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

[illegible] வெளியீட்டு விழா நடைபெறுவதறிந்து மிக்க மகிழ்கின்றோம். உங்களுக்குத் [illegible] [illegible], [illegible] கிடைத்த [illegible] வெளியீட்டு [illegible] தங்களுக்கு நமது உளமார்ந்த பாராட்டு கலந்த அன்பையும் மகிழ்வையும் தெரிவித்துக் கொள்கின்றோம்


நூல் வெளியீட்டு விழா சிறக்க [illegible] திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

திரு,
[illegible] செட்டியார் அவர்கள்
[illegible] (அஞ்சல்)
புதுக்கோட்டை

[signature]

திருமுறைகளே நமது மறை திருக்குறளே நமது பொதுமறை



உ
சிவமயம்

கோனாபட்டு ஸ்ரீ கொப்புடையம்மன் பாமாலை

காப்பு

நாட்டார்கள் கண்ணாய் நகரத்தார் கண்ணொளியாய்
கூட்டாய் இருவர் குரல்வளமாய் —நாட்டமுடன்
கோனா பட்டில்வளர் கொப்புடைய நாயகியே!
வானாய்ப் பொழிவாய் வரம்.

வரமளிக்கும் விநாயகா! வாழ்வளிக்கும் தெய்வமே!
வளமளிக்கும் தேவி உன்றன்
வனமேவும் எல்லையில் தினமருளும் துர்க்கையாய்
வந்தருளும் மாட்சி பாடக்
கரமளிக்கும் செந்தமிழ்க் கவியருளும் மாலையைக்
காணிக்கை ஆக்கு கின்றேன்
கவியரசி பாடலில் புவியரசி கொப்பாத்தா
கழலிணை முழங்கி நிற்க
நிறம்வளரும் தாமரை நிதம்வளரும் ஊருணி
நிழல்தவழும் கோயி லுக்குள்
நிறைவளரும் மீனாட்சி நேர்வளரும் சுந்தரேசர்
நேரிலே பரிந்து ரைப்பார்
அறம்வளரும் கோநகர் தரம்வளரும் கொப்பாத்தா
அருளினைப் பாட்டில் வைக்க
ஆனைமுக விநாயகா! மோனைதவழ் கவிகளை
அள்ளியே வழங்கு வாயே!

பாமாலை

வானகத்தில் வளமனைகள் கானகத்தில் மரவகைகள்
வட்டமிட்டுச் சுற்றி நிற்க
வயல்வளரும் நெல்மணி அயல்வளரும் பொன்மணி
மலைகளாய் முற்றும் ஓங்கும்
கோநகரம் என்றுபுகழ் கோனா பட்டில்சிவன்
கோயிலின் பின்பு றத்தில்
குளம்தவழும் நீருடன் கொட்டகையில் தேருடன்
கோயிலின் வாயில் கொண்டு
மாநகரக் காவலாய்க் கோநகரத் தேவியாய்
வாழ்வருளும் சக்தி யாகி
வலமிடப் புறங்களில் வாளேந்தும், கருப்பர்கள்
வாய்த்தஇரு கைகள் ஆகி
ஊனகத்தில் உயிராகி உயிரகத்தில் ஒளியான
உலகத்தின் மாசக் தியே!
ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே!
ஓடிவந் தருளு வாயே

திங்களே பூமுகம்; செவ்வாயோ குமுதமாம்;
சென்னியில் பவள மல்லி
சிந்தனைக் கன்றுபோல் சிற்றாடை கட்டியே
திகழ்ந்திடும் எங்கள் அன்னை !
மங்கலம் பொங்கவே மனைகளில் தங்குவாய்
மாரியைப் பொழிய வைப்பாய்
மாதாவாய்ப் போற்றுவாய்த் தாதாவாய் ஏற்றுவாய்
மதிவிளக் கேற்றி வைப்பாய்
பங்குனிக் கோடையால் மங்கிடும் உயிர்களைப்
பாரிலே குளிர வைக்கப்
பைக்கண்மாயக் கரைகளில் பாய்ந்திடும் வெள்ளமாய்ப்
பரவியே மோதி நிற்பாய்
உங்களுயர் வாழ்வெலாம் ஓங்குமன வளமென
உணர்விக்கும் மாசக் தியே !
ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே !
ஓடிவந் தருளு வாயே.



வைகாசி மாதமோ ஆனியாம் திங்களோ
வளர்பிறை வெள்ளி தன்னில்
பதினாறு காராட்டின் பச்சிளங் குட்டியைப்
பலிசிறப் பிட்டு வைத்துக்
கைகாட்டும் உன்னருள் கண்காட்சி ஆகவே
கரகத்தில் இறக்கி வைத்துக்
காளிக்கு ஞாயிற்றில் காப்பான பூசையால்
கால்கோள் செய்து வைத்துக்
கைகாட்டும் சோலையில் மணம்காட்டும் பூக்களை
மலர்காட்டும் காலில் கொட்ட
வைக்கரை விட்டுநீ கைக்கரகம் தன்னிலே
வார்ந்துமே எழுந்து நின்றே
உய்காட்டும் நெறியினை உடன்காட்டும் திருவிழா
உவந்துநீ மகிழ்ந்து காண
ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே !
ஓடிவந் தருளு வாயே !

கண்மாயின் கரையிலே கரகத்தின் நீரிலே
கருணையாய்ப் பொங்கி நிற்பாய்
கண்களால் காணவே சன்னதம் ஆடியின்
கால்களால் வீதி பார்ப்பாய்
விண்தவழ் மதியென விளங்கிடும் அன்றுநீ
வீதிபார் தெருநாச்சியே !
வேளைபார்த் திறங்கிடும் பாளையாம் உண்முகம்
வென்றிடும் காமர்ட் சியே !
அன்னையாம் உன்னையே செவ்வாயாம் மாலையில்
அழைத்துமே கோயில் சேர்க்க !
அழகான தேரினைப் பலபேர்கள் கூடியே
கண்மாயின் கரையில் சேர்ப்பார்
உன்எழில் தேரிலே பண்ணுடன் பாடியே
உயரத்தில் ஏற்றி வைக்க
ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே !
ஓடிவந் தருளு வாயே !

கூரையின் நாச்சிநீ குடத்திலே சாட்சிநீ

கோபுரத் துச்சி நீயே

கோவிலில் பாவைநீ பாவையின் விளக்குநீ

கொழும்சுடர் ஒளியும் நீயே

தாரையாம் மாரிநீ தண்ணீரில் குளிர்ச்சிநீ

தமிழுடன் இனிமை நீயே

தாயும்நீ தந்தைநீ தமக்கைநீ தமயன்நீ

தங்கையும் ஆவை நீயே

தேரையும் நகர்த்துவாய்; தெருவையும் உயர்த்துவாய்

செய்கையின் நேர்த்தி ஆவாய்

செய்களில் விளைவையும் கைகளில் பொருளையும்

சேர்த்துமே காத்து நிற்பாய்

ஊரையே காத்திடும் உத்தமி! பத்தினி!

ஓங்கார நாத வடிவே!

ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே!

ஓடிவந் தருளு வாயே!

வயிரமாம் தேரிலே கரகமாம் தேவிநீ
மாலையில் கொடிய சைப்பாய்
வழியெலாம் அன்பர்கள் ஒளியெலாம் ஏந்துவார்
வாத்தியம் முழங்கி நிற்பார்
உயிரெலாம் உருகுமாம் உன்னெழில் காணவே
ஒருகோடி விழி வேண்டுமாம்
உணர்வெலாம் திரட்டுவாய் உயிரிலே பாய்ச்சுவாய்
உதிரமாய்ச் சிவந்து நிற்பாய்
பயிரெலாம் நீயெனப் பன்னீரைத் தண்ணீராய்ப்
பாய்ச்சுவார் இறக்கி வைப்பார்
பத்திசேர் உட்புறம் பக்தர்தோள் சுற்றுவாய்
மண்டபம் கொலுவி ருப்பாய்
உயிரான தெய்வமே! உயர்வான திருமணம்
உரிமையாய்ச் செய்து கொள்ள
ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே!
ஓடிவந் தருளு வாயே!

ஊஞ்சலில் பூஞ்செடி ஒருசோடி ஆனதை

உன்மார்புத் தாலி காட்டும்

ஊரெலாம் கூடியே பேருடன் எழுந்திடும்

உயர்வான மகமை காட்டும்

வாஞ்சையால் உன்னையே வாவென் றழைக்கவே

பாடவும் கோயில் உண்டாம்

வளர்கண்மாய்க் கரையிலும் மலர்அம்மன் அடிமேல்

வாவென் றழைப்ப துண்டாம்

மாஞ்சோலைக் கிளியென மாதா நீ விளங்கிடும்

மண்டபக் கருவ றைக்குள்

வாவென்று சொல்வதும் தாவிநீ வருவதும்

வாத்தியம் சாட்சி சொல்லும்

ஊஞ்சலாம் எம்மனம் உயர்நிலை எய்தவே

உயர்வழி காட்டு தாயே !

ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே !

ஓடிவந் தருளு வாயே !

வந்திடு வந்திடு என்றுனைக் கெஞ்சியும்
    வாரா திருக்க லாமா ?
வந்தபின் கேட்கலாம் வம்புகள் போக்கலாம்
    வழக்குகள் தீர்க்க லாமே ?
தந்தன தானை தாளங்கள் கூவியும்
    தாமதம் ஆக லாமோ ?
தவறுசெய் பிள்ளைகள் தடத்தினை மாற்றியே
    தாயேநீ தடுக்கொ ணாதோ ?
சந்தனம் குங்குமம் பந்துசேர் மாலைகள்
    சார்த்தியே போற்று கின்றோம்.
சார்த்திடும் பொருள்கள்போல் சார்த்துவார் மனம்பெறச்
    சக்தியைத் தருக தாயே !
உந்தனம் எந்தனம் உலகமே உன்வனம்
    உதிருமுன் உறுதி காண
ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே !
    ஓடிவந் தருளு வாயே !

பால்சிறப் பாட்டுவார் பள்ளயம் போடுவார்

பச்சரிசிப் பொங்க விடுவார்

படையலைப் பிரிக்குமுன் பயன்தரும் விடைவரும்

பக்தியும் பரிசு வாங்கும்

கால்சிறப் பனைத்தையும் கண்ணருள் காட்டுமாம்

கைமேலே பலன் கிடைக்கும்

கண்திறப் பாயெனில் கன்னியர் காளையர்

கழுத்திலே மாலை சேரும்

கால்நடைக் குட்டிகள் கழுத்துகும் குருதியைக்

கறந்தபால் எனக் குடிப்பாய்

கண்களைத் திறந்துமே தெங்கிள நீர்களை

கடக்கெனக் குடித்து வைப்பாய்

ஊழ்வினை மானிடர் உயர்திணை யாகவே

ஒழுங்குகள் செய்து காக்க

ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே !

ஓடிவந் தருளு வாயே !

சத்தா பரணமாம் பத்துக்கு மேல்வரும்
    தனிச்சிறப் புடைய நாளில்
தாளமும் மேளமும் சாப்பாடும் கூப்பாடும்
    தடபுட லாய்நடக்கும்
உற்றாரும் மற்றாரும் ஊராரும் சுற்றாரும்
    உன்கோயில் முன் கூடுவார்
ஒயிலாட்டாம் கரகாட்டம் மயிலாட்டம் இவற்றோடும்
    உயர்வாணர் கவிபாடுவார்
பெற்றோரும் பிறந்தோரும் பிரிந்தோரும் மறந்தோரும்
    பிரியமாய் உடன் கூடுவார்
பெரியோரும் சிறியோரும் வறியோரும் வளத்தோரும்
    சரியாகக் கலந் தாடுவார்
ஒத்தாசை யாகவே உண்டான பிள்ளைகள்
    முத்தான தொட்டில் ஆட
ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே!
    ஓடிவந் தருளு வாயே!

அகரமும் உகரமும் ஆனஓங் காரமே!

அருவுரு வான தாயே!

ஆடுகள் பருகுவாய் மாடுகள் விரட்டுவாய்

ஆங்காரம் ஆகு வாயே!

உகரமாம் உயிர்களை ஊங்கார மூச்சென

உய்விக்கும் நாசி நீயே!

ஊகமாம் உத்தியை உழைப்பெனும் சக்தியால்

உயர்விக்கும் ராசி நீயே!

எகரஏ காரமாய் இடுகின்ற வினாக்களின்

எதிர்வரும் விடையா குவாய்

ஐகார ஒகாரம் ஆங்கார ஓங்காரம்

அனைத்துமாம் படையாகுவாய்

உகரமாய் சுழியிலே சிகரமாம் பரம்பொருள்

ஊடாக ஒன்றி நிற்க

ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே!

ஓடிவந் தருளு வாயே!

அருவமாம் தேவியுன் அளவிலாக் கருணையால்
அருமையாம் செயல்கள் ஆகும்
அன்னியர் துன்னுவார் அகன்றவர் கூடுவர்
ஆகாத நோய்கள் போகும்
பருவமாம் நாளிலே பெருமழை பொழிந்திடும்
பயிர்களின் விளைவு கூடும்
பசிப்பினி நீங்கிடும் பசுப்பயன் ஓங்கிடும்
பகைமைகள் விலகி ஓடும்
அரங்கனார் சிங்காரம் அரசியாம் வடிவேலன்
அருந்தமிழ் மாலை சூட்டி
அழகான கோநகர் அணியான கொப்பாத்தா
அடிமலர் வணங்கி நிற்போம்
உரங்காணும் வல்லுடல் வளம்காணும் நல்மனம்
ஒருசேரக் கலந்து வாழ
ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே!
ஓடிவந் தருளு வாயே!

வாரங்கள் மூன்றிலே பக்தியாய் நடத்திடும்

வைபவம் தொடர்ந்து வாழ்க!

பத்தியம் போலவே சத்தியம் ஆகவே

வாழ்சாமி ஆடி வாழ்க!

காரமாய்த் தொடங்கியே கனிவாய் துடைத்திடும்

காட்சிகள் அனைத்தும் வாழ்க!

கணபதி முன்புறம் கணங்களோ நாற்புறம்

கன்னியர் ஏழு பேரில்

ஆரங்கள் சூடியே அமைந்திடும் ஒருத்திநீ

அன்பினால் ஆண்டு வாழ்க!

ஆத்தாஉன் கருணையால் அகிலத்தார் அனைவரும்

அன்புடன் கூடி வாழ்க!

ஓரங்கொள் நெஞ்சிலே ஒழுக்கங்கள் நிலைபெற

உலகமே உயர்ந்து வாழ

ஒப்பேதும் இல்லாத கொப்புடைய நாயகியே!

ஓடிவந் தருளு வாயே!

வாழ்த்து

வான்மழை சரியாய்ப் பெய்க!

வாழ்முறை அமைதி காண்க!

ஆன்மடி பால்சு ரக்க!

அகவிலை கீழி றங்க!

கோன்முறை நீதி செய்க!

கொடுமைகள் அகன்று நீங்க!

மேன்மைகொள் உள்ளம் கொண்டோர்

வெல்லுக உலக மெல்லாம்.

உலகறிந்த கவிஞர் அர. சிங்கார வடிவேலன் அவர்கள் காளிதாசன் புகழ் போல, கண்ணதாசன் கவிதை போல வாழ்வாங்கு வாழ்க.

எல்லாம் வல்ல உலக நாயகியாம் ஸ்ரீ கொப்புடையம்மன் கோநகரில் குடியிருந்து கோடி வரம் தந்து ஓடிவரும் பக்தர்கள் அனைவருக்கும் அருள் பாலித்து வருகிறாள். சரித்திர நாயகி அவள். தரித்திரம் போக்குபவள் அவள். காலங்கடந்தவள் கரை கண்டவள் அளப்பரிய அருள் உள்ளவள். சரித்திரம் படைப்பவள். அவள் சரீரம் அற்றவள். அரு உருவாய் அருள் பாலிப்பவள் அவள் கோநகர் வந்த கதை காது வழிச்செய்தி. பெரியோர்கள் சொல்லி காலம் காலமாய் வழங்கி வரும் சரித்திரத்தை எடுத்து வடிவாக்கியிருக்கிறோம்.

வடிவரசி, வாழ்வரசி வரங்களுடனும் வாழ்த்துக்களுடனும்.

காராள வெள்ளாளர் காலத்தில் மலையாள தேசத்தில் 7 தெய்வங்களை வைத்து பிராமணர் ஒருவர் பூஜை செய்து வந்தார். பூஜை செய்யும் காலத்தில் மாலை பூஜை முடிந்தபின், தன் மகன்

கோவிலுக்குள் இருப்பதை பாராமல், கதவை சாற்றி விட்டார். வீட்டுக்குச் சென்ற பின் தன் மனைவி ''குழந்தை எங்கே?'' என்று தன் கணவரிடம் கேட்டாள் 'ஐயோ, நான் மறந்து விட்டேன்' என்று கதறி கோவிலுக்குச் சென்றார். கோயிலில் 7 தெய்வங்களும் குழந்தையைச் சேர்த்து எட்டாக விளையாடிக் கொண்டிருந்-தார்கள். தெய்வங்களிடம் தன் குழந்தையை தரும்படி கேட்டார். ''நாங்கள் உன் குழந்தை-யோடு விளையாடிக் கொண்டிருக்கிறோம் நாளை உன் குழந்தையைத் தருகிறோம்'' என்று 7 தெய்வங்களும் கூறின. மீண்டும் வற்புறுத்தி தன் குழந்தையைத் தரும்படி புலம்பித்திட்டினார். தெய்வங்களுக்கு கோபம் உண்டாகி குழந்தையை கால் வேறு கை வேறாக கொடுத்தன. உடனே கோபம் அடைந்த பிராமணர் 7 தெய்வங்களையும் பேழைப் பெட்டியில் வைத்து அடைத்து, பேழைப் பெட்டியைத் தூக்கி ஆற்றங்கரையில் நடந்து வந்து ஈஸ்வரன் செய்த மதியோ அல்லது என் மந்திரத்தால் செய்த குறையோ என்று கூறி

''ரீசனிடம் அடிமை கொள்வாய்'' என்று ஆற்றில் விட்டு வீட்டுக்குச் சென்றார். இனிமேல் நாம் இங்கு இருக்க வேண்டாம் என்று ஊரை விட்டுச் சென்று விட்டார்.

ஆற்றினில் வந்த பேழைப் பெட்டி கரந்தை மலையில் தங்கி அங்கு இருந்து ஆற்றின் வழியாக நெடுமரம் வந்து நெடுமரக்கண்மாய் மடைக்-கரையில் சிக்கிக் கொண்டது. கண்மாய் மடை திறந்துவிடும் பணியாளர் 'ஊர்ப்பாய்ச்சி' மடைகள் திறக்கும் போது பேழையைப் பார்த்தார் பொக்கிஷம் உள்ளே இருக்கிறது என கற்பனை செய்து கொண்டு வைக்கோல் போரில் மறைத்து வைத்தார். வைக்கோல் போர் தீப்பிடித்து எரிந்தும் பேழை சேதமாகாமல் இருந்தது. ஊர் மக்கள் பார்த்து என்ன ஏது என்று கேட்டு பெரியவர்கள் பேழைப் பெட்டியை தூக்கி ஊருக்கு வடபுரத்தில் உள்ள உசுவை மரத்தடியில் வைத்து பேழைப் பெட்டியை திறக்கும் பொழுது மங்கையர்க்கரசி (மங்கைச்சி) மலையரசி

படுத்திருக்க பாக்கி ஐந்து தெய்வங்களும் வெளியில் புறப்பட்டது. ஐந்து பேரில் பூமலைச்சி என்ற அம்பாள் வைரவன்பட்டியிலும் கொப்பிடாரி என்ற அம்பாள் அரிபுரத்திலும் கோனாபட்டிற்கு வந்த கொப்பிடாரி அம்பாள் அரிபுரம் வழியாக நெய்வாசல் வந்து நல்லூர் சிரத்தக்கண்மாய் வழியாக வெங்களூர் வந்து பெரியகருப்பரையும் கூட்டிக் கொண்டு பின்னர் கோனாபட்டு பைக்கண்மாய் வழியாக தற்சமயம் உள்ள பத்தைக்குள் அமர்ந்து அருள்புரிந்து கொண்டிருக்கிறாள். அடுத்து குளத்துப்பட்டியில் கொப்புடை அம்மனும் கடியாபட்டியில் அரிய நாச்சி ஆங்காங்கே 7 தெய்வங்களும் அமர்ந்தன. எழுவரில் சிறப்புற்று விளங்கி வருவது கோனபட்டு கொப்பிடாரி அம்பாள் 5 வது தெய்வம்.

வருஷா வருஷம் வைகாசி/ஆனி திங்களில் வளர்பிறை செவ்வாய்க்கிழமைகளில் தேர்த்-திருவிழா நடைபெறுகிறது.



உ

கோனபட்டுக் கொடை வள்ளல்

ஹாங்காங் நாச்சியப்பா செட்டியார்

— ஓர் அறிமுகம்

சிந்தனைக் கவிஞர் சிந. சிதம்பரம்

செப்புமொழியெலாம் தப்பாதிருக்கவும்
ஒப்பிலா நற்பேறுடையாய்த் திகழவும்
தைப்பாற் பொங்கல்போல் தகைமை நிறையவும்
கொப்புடைநாயகி குளிர்அருள் துணையால்
கோநகர்ப்பிறந்து விரிகுவலயம் பொழிலுற
மாநகர் ஹாங்காங்கில் மகிள்வுற ஓங்கும்
நாச்சியப்பர் மீனாட்சி ஆச்சியின் நல்லறம்
காய்ச்சிய பாலிற் கற்கண்டாய் இனிக்குமே!
ஈட்டத் தெரிந்தவர் ஈகை புரிந்தவர்
ஊட்டும் தாய் போல் உறுதுணை ஆனவர்
பெற்ற பிள்ளைகளால் பெருமை பெற்றவர்
குற்றம் களைந்து சுற்றம் மகிழ்பவர்
மருமகள் தன்னையும் மகளாய்க் காண்பவர்
பெருமைகள் ஆயிரம் பேசா நாவினர்

அடக்கம் மிகுந்த அறிவுயர் அண்ணல்
படச்சுருள் போலப் பதியும் நினைவினர்
நகரத்தார் நலனில் நாட்டம் கொண்டவர்
திகழ்பிற இனத்தார்க்கும் செம்மைகள் செய்பவர்
நாச்சியப்பர் குடும்ப நல்லறங்கள்
செந்தமிழில் உருகிடும் செம்மலின் தர்மம்
சிந்தாது தந்திடச் செவ்வேள் துணையே !
இச்சடி விநாயகர் எழில்சார் கோயில்
தச்சுச் செய்து தழைத்ததில் தொடங்கியது
வாஞ்சை யுள்ளவன் வாயு புத்திரன்
ஆஞ்ச நேயனின் ஆற்றல் காட்டிடும்
முப்பத் தெட்டடி மூலவர் உற்சவர்
அற்புதமாய் அமைந்தது கெடிலத்தில்
தான் தோன்றி விநாயகர் தலத்தில் நித்யப்படி
மின் விளக் கொளியில் மிளிரச் செய்தது
புத்தாம் பூர் அகரவயல் பொலிய தினக்கட்டளை
முத்தாரணி அய்யப்பன் ஆண்டு முழுவதும்
இராக்கால பூஜை இயற்றிப் பார்த்தும்
கலியுக வரதன் கண்கண்ட கடவுள்
பொலிவுறத் திருமலை பூமகள் மார்பன்
வேங்கடவனுக்கு வேண்டிய பூஜைகள்

திருப்பள்ளி எழுச்சி திவ்யப் பிரபந்தம்
கருமேக வண்ணனின் கருவறை ஏகாந்தம்
ஒருநாள் உற்சவம் ஒவ்வோர் ஆண்டும்
எழில் பழனிக் குன்றில் இராக்கால பூஜை
குழிவிடும் கண்ணன் கொப்பூழ் அழகன்
குருவா யூரனுக்குக் களப பூஜையும்
பெருங்களூர் மேவிய வம்ச விருத்தீசர்
மருங்கில் வணங்கும் ஒருநாட் கட்டளை
திரு நள்ளாறு தில்லி உத்திர சுவாமி
முடிச்சூர் கோயில் முறைநாள் வழிபாடும்
படித்தரம் செய்த பாங்கினர் காண்மின் !
உறையும் தெய்வம் ஒளிபெறப் பீடத்தில்
மருந்துகள் சாத்தி மறைகள் ஓதி
அட்ட பந்தனம் ஆற்றும் பணியிலும்
இட்ட முடன் கலப்பது இவர்தம் வழக்கம்
பெற்ற ஊரின் புகழ்பெறு சிவத்தலம்,
உற்ற மனைவியர் உதித்த ராயவரம்,
வெ. மு. சிவன் கோயில் வெற்புயர் ஊட்டி
காசி விசுவ நாதர் கோயிலில்
தேசு புகழ் முனிவர் திகழ் குன்றக்குடியில்
காடேறி அம்மனின் கருணை சேர் ஆலயம்


ஈடே இல்லாத இளங்குடி அய்யனார்
சென்னை வைரவர் சிவசக்தி பீடம்
பொன்னிகர் வடவாளம் கவச ஸ்தூபிகள்
காடேறி தேவியாள் கைகுவிப்பார் நெஞ்சக்
கூடேறி வாழும் குலதெய்வ ஆலயம்
ஆள்துளைக் கிணற்றை அமைத்துக்குடிநீர்
கோயிற் பணிக்குக் கும்பிடும் சாமிக்குக்
குடிமக்கள் அனைவர்க்கும் வழங்கிய குடிமை
பெண்குரு பீடமாய் பெருமையுற விளங்கும்
வண்ணத் துலாவூர்க்கு வழங்கிய தொகையும்
ஹாங்காங் நாச்சியப்பர் ஆங்காங்கு வழங்கிய
பாங்கினைக் கூறப் பாடல் பாத்தாதே !
பஞ்ச லோக ஐயப்பன் சிலையை
செஞ்சொல் பக்தர்கள் சேவிக்கச் செய்தார்
கொப்புடையாள் திகழும் கோனு பட்டில்
அற்புதமாய் ஓர் ஆஞ்சநேய மண்டபம்
கலைவாணி பள்ளியில் நிலையான தேவாரம்
புலவர்கள் நால்வர்க்குப் பொலிவுறு மண்டபம்
கற்பித்த வண்ணம் கட்டித் தந்தே
சப்தா பர்ணத்தைச் சால்புற நடத்தினர்
செவ்வாய்த் திருநாள் திருவீதி வலம்வர


இவ்வாண்டு இறைவியின் திருத்தேரதனைப்
பீடம் புதுக்கி மேல்தளம் திருத்த
நாடும் நகரும் தேர்வடம் பிடிக்கும்
நாச்சியப்பர் தர்மம் நாடொறும் வளர்க!
அறுபத்தி ஐந்து நாடுகள் சுற்றியும்
திருவண்ணுமலை தெரிந்த சிவபாரனை
ஒரு நாட் கூடத் தவருது செய்தும்
அயல் நாட்டிலும் அறம்வளர் பாங்கில்
செய்கோன் மாரிக்குத் திருப்பொ ற்ருலியும்
தெண்டா யுதபாணி கோயில் திறப்பு முயற்சியும்
செல்வம் நிறைந்த சிங்கப் பூரில்
வலம்புரிச் சங்குகள் நூற்றி இருபது
வளர் அபி சேகம் சால்புறச் செய்தும்
செட்டி முருகன் சிங்கைத் தண்டாயுதன்
வெள்ளி ரதத்தை வீதி வல முற்றும்
உள்ளம் தோய உணர்ந்து வணங்கி
இனம் மதம் பாராது இணை நட்பினர்க்கு
மணம் புரிகையில் மாங்கல்யம் கொடுத்தும்
கல்விப் பணிகள் மருத்துவ மனைகள்
திருமண உதவி செய்மனம் வளர்க!
அன்ருே நவசக்தி விநாயகர்க்கு

அட்டபந்தனம் பின்பு ரஜத பந்தனம்
வெள்ளிப் பூச்சு, விரைவில் செய்வதோ
சுவர்ண பந்தனம் தங்கப் பூச்சு
வளர வளர வளரும் வள்ளன்மை
அழகன் பிறந்குடி கற்ற அரிச்சுவடி.
நாவன்று அண்ணனுக்கு நாளெலாம் பணியாம்
கோபம் வராது குற்றம்கடிதல் ஓர் அணியாம்
சீனர்கள் நிறைந்த செல்வ ஹாங் காங்கில்
மானத் தமிழ்ச்சங்க மாண்புறு தலைவர்
உலக இந்திய நண்பர் கூட்டமைப்பின்
திலகமாய்த் திருவண்ணாமலை ஆதின முனிவர்
நெருங்கிய அன்பராய் நேயக்கவிஞன்
அரங்கத் தமிழை ஆண்டு சிறந்தோன்
கண்ணதாசனின் கவினுறு நண்பராய்
இந்தியக் குடியரசு ஏற்ற தலைவர் முதல்
வந்த சராசரி இந்தியனையும் ஏற்று
ஹாங்காங்கில் விருந்தோம்பும் மாங்கனிக்குணமும்
பூர்வீக பூமியாம் பூம்புகார் தன்னில்
இராஜ நாரயணப் பெருமாள் கோவில்
சன்னதி தோறும் சலவைக்கல் பதித்து
இவர்கள் செய்த பணியை என் தமிழால்

அளக்க முடியாது களைத்துப் போகிறேன்
விளக்கு ஒன்று ஏற்றும் ஆயிரம் விளக்குகள்
கிழக்குச் சூரியனின் கிரண வெளிச்சங்கள்
அவ்வையாய் இருந்தால் அதியனுக்கு அளித்த
கொவ்வைப் பழத்தை உங்களுக்குக் கொடுப்பேன்
என் ஆயுளையும் இவரடைக என்றே
தென்னவன் முருகன் திருவடி தொழுகிறேன்
நாச்சியப்பர் புகழ் பாடி என்நாச் சிறப்புற்றது
ஊர்ச்சிறப்பு உன்சிறப்பு உன்சிறப்பு ஊர்ச்சிறப்பு
செல்வ! உன் புகழ் பாடச் சிதம்பரம் போதுமா!
சிங்கார வேலனார் செந்தமிழ் வேண்டும்
உன்னைப் பாடாது நீ வணங்கும் கொப்புடை
அன்னையைப் பாடிய அமுதக் கவியைப்
படைக்கின்ற வேளையில் பள்ளயம் போடுமுன்
உடைக்கின்றேன் தேங்காயை! உயர்க வள்ளன்மை!

சித. சிதம்பரம்





வாடிக்கையாளர்களுக்கு பெரும்பயன் தரும்
அதிக வட்டி விகிதங்களை
மதுரை வங்கி அறிவிக்கிறது

15-5-98 ஆம் தேதி முதல் புதிய வட்டி விகிதங்கள்
உள்நாட்டு டெபாசிட்களுக்கு

15 நாட்கள் முதல் 29 நாட்கள் வரை	- 8%
30 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை	- 9%
91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை	- 10%
181 நாட்கள் முதல் 2 வருடங்களுக்குக் குறைவாக	- 11%
2 வருடங்களும் அதற்கு மேலும்	- 12%

180 நாட்கள் வரை

15 லட்சங்களுக்கு மேல் ஒரே வைப்புத்தொகைக்கு -

உரியவட்டி
விகிதத்துக்கு
மேல் 0.5% கூடுதல்



பாங்க் ஆப் மதுரை லிமிடெட்.
வளர்ச்சி தரும் வங்கி



கோனாபட்டு
ஸ்ரீ கொப்புடையநாயகி அம்மன்

ஸ்ரீ லெட்சுமி பிரிண்டர்ஸ்

249/1, செக்காலை ரோடு,
காரைக்குடி - 630 002.
✆ 35654, 33418.